2025 அக்டோபர் மாதம் 09 – ஆம் தேதி வியாழக்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

O.S. நெம்பர் : 41/2022

2025–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 09 – ஆம் தேதி வியாழக்கிழமை வாதி தரப்பு சாட்சியாகிய வா.சா.1–வது நபரின் வாக்குமூலம்

(1969–ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.ட.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW1 – பெத்தாட்சி |
| கணவர் பெயர்: | பால்பாண்டி |
| ஊர்: | வடுகப்பட்டி |
| வட்டம்: | பெரியகுளம் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | வியாபாரம் |
| வயது : | 45 |

09.10.2025

**(சாட்சி ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டார்).**
**சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.**

**முதல் விசாரணை**–

நான் இந்த வழக்கில் வாதியாவேன். வழக்கு விபரங்கள் குறித்து நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்கின்றேன். நான் இன்று தாக்கல் செய்யும் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நன்கு தெரிந்து கையொப்பம் செய்துள்ளேன். அதை வாதி தரப்பு சாட்சியமாக ஏற்க வேண்டுகின்றேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன் அவற்றை வாதி தரப்பு சான்றாவணங்களாக ஏற்றுக்கொள்ள வேண்டி பிரார்த்திக்கிறேன்.

| | |
|---|---|
| 1. | 04.10.2021ம் தேதியிட்டு தாவா 1ம் லக்க சொத்திற்குரிய பட்டா இணையதள நகல் (பட்டா எண்.) – **வா.சா.ஆ.1** |
| 2. | 06.01.2022ம் தேதியிட்டு நான் எனது வழக்கறிஞர் மூலம் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல், அஞ்சலக இரசீதுடன் அசல் – **வா.சா.ஆ.2** |

| | |
|---|---|
| 3. | 13.01.2022 ம் தேதியிட்டு நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை 1ம் பிரதிவாதி பெற்றுக்கொள்ளாமல் திருப்பப்பட்ட அஞ்சலக உறை அசல் – **வா.சா.ஆ.3** |
| 4. | 10.01.2022 ம் தேதியிட்டு நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை 3ம் பிரதிவாதி பெற்றுக்கொள்ளாமல் திருப்பப்பட்ட அஞ்சலக உறை அசல் – **வா.சா.ஆ.4** |
| 5. | 11.01.2022 ம் தேதியிட்டு நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை 4ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல் – **வா.சா.ஆ.5** |
| 6. | 10.01.2022 ம் தேதியிட்டு நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை 7ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல் – – **வா.சா.ஆ.6** |
| 7. | 11.01.2022 ம் தேதியிட்டு நான் 7ம் பிரதிவாதிக்கு அனுப்பிய புகார் மனு ஒளிப்பதிவு நகல் – **வா.சா.ஆ.7** |
| 8. | எனது ஆதார் அடையாள அட்டை ஒளிப்பதிவு நகல் (அசலுடன் சரிபார்க்கப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது) – **வா.சா.ஆ.8** |

நான் பிராதில் கோரியவாறு தீர்ப்பும், தீர்ப்பாணையும் பிறப்பிக்க வேண்டி பிரார்த்திக்கிறேன்.

**<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**:– இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 09.10.2025 அன்று வியாழக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SANKAR Digitally signed by SANKAR Date: 2025.10.09 18:58:50 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி (FAC), தேனி.
09.10.2025.